**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : ஜோதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வெண்ணானம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 22.05.2024 ம் தேதியன்று காலை 09.00 மணி சுமாருக்கு நான் வனவாசி செல்வதற்காக செலவடை மேடு பேருந்து நிறுத்தத்தில் இருந்து மேட்டுர் செல்லும் தங்கம் பேருந்தில் ஏறி இடதுப்புறமாக முன்பக்கம் அமர்ந்து பயணம் செய்தேன். நான் பயணம் செய்த பேருந்து ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்குள் சென்றது. அதன் ஓட்டுநர் வேகத்தடையை தாண்டியதும் பிரேக் பிடிக்க முடியாமல் பேருந்து நிலையத்திற்குள் ஓட்டிச்சென்று ஒரு வயதான நபர் மீது மோதி, பின்னர் தூண் மீது மோதி நின்றது. எனக்கு நெஞ்சு , முழங்கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. முன்னால் நின்றுக்கொண்டிருந்த நபர் காயம் ஏற்பட்டு இறந்துபோனதாக தெரிந்துக்கொண்டேன். பிறகு எங்களை ஆம்புலன்ஸ் மூலமாக ஜலகண்டாபுரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மாலை சென்றுவிட்டேன். சம்பவம் சமயத்தில் நான் ஓட்டுநரை பார்த்தேன். தற்போது நினைவில்லை. இந்த விபத்திற்கு பேருந்து ஓட்டுநரின் தவறால் தான் விபத்து நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மறுநாள் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும்போது தங்கம் பேருந்து பதிவெண் சொன்னேனா என்றால் இல்லை. தினசரி அந்த பேருந்தில் பயணம் செய்வேனா என்றால் விபத்து நடப்பதற்கு 1 வாரம் முன்பிருந்து அந்த பேருந்தில் தான் நான் பயணம் செய்து வந்தேன். இந்த விபத்து பேருந்து ஓட்டுநர் பிரேக் பிடிக்காததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் ஆமாம். போலீசார் விசாரணையிலும் பேருந்து பிரேக் பிடிக்காததனால் விபத்து ஏற்பட்டதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. அடிப்பட்டவர்கள் யார்யார் என்ற விவரம் என்று எனக்கு தெரியாது என்றால் பேருந்தின் முன்புறம் உட்கார்ந்திருந்த இருவருக்கும், வெளியே நின்றுக்கொண்டிருந்த 3 நபர்களுக்கும் அடிப்பட்டது. அவர்கள் பெயர், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. பிரேக் பிடிக்கவில்லை என்பது குறித்து பேருந்து ஓட்டுநர் பதட்டமாக பிரேக் அழுத்தி முயற்சி ஏதாவது செய்தாரா என்றால் செய்தார்.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**